காவல்துறை தலைவர்-காவல் ஆணையாளர், திருநெல்வேலி மாநகரம் அவர்களின்
செயல்முறை ஆணைகள்
முன்னிலை திரு.தீபக் எம்.டமோர்,இ.கா.ப.

ந.க.எண்.அ4-196215-2019 நாள். 06.11.2020
மா.கா.ஆணைஎண் 768 -2020.

| | |
|---|---|
| குறுந்தலைப்பு- | காவல் – திருநெல்வேலி மாநகரம் – பணியமைப்பு கருணை அடிப்படை பணிநியமனம் – திருமதி.பி.ரேகா இளநிலை உதவியாளர் தற்காலிக பணியினை பணிவரன் முறைப்படுத்துதல் – தொடர்பாக |
| படிக்க - | 1.அரசாணை (நிலை) எண் 560 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.03.08.1997<br>2.அரசாணை (நிலை எண்80) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (முர1)துறை, நாள்.02.03.2016<br>3.அரசாணை எண் 220 உள்(கா-15)துறை நாள்.18.02.2016<br>4.தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/C.A.R.1/2016, நாள் 21.12.2017. |

-----

ஆணை

திரு.கே.எஸ்.பிரபாகரன்நாயர், சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 21.09.1999 அன்று இறந்து விட்டார். அவரது குடும்பத்தில் பொருளீட்டும் நபர் யாருமில்லாததால் அவருடைய குடும்பம் வறுமையான சூழ்நிலையில் இருந்து வந்தது. எனவே அவருடைய மகள் திருமதி பி.ரேகா என்பவர் தனக்கு காவல்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 07.02.2000 அன்று விண்ணப்பித்திருந்தார். திருமதி பி.ரேகா என்பவரது பிறந்த தேதி 30.05.1978 ஆகும். இவர் முதுநிலை பட்டதாரி தேர்ச்சி பெற்றுள்ளார்.

2) அவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்காக அரசு ஆணை(நிலை) எண்.560 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.03.08.1977 மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளார். எனவே அவரது விண்ணப்பம் பரசீலனை செய்யப்பட்டு 22.09.2005 முற்பகல் முதல் காவல்துறையில் கருணை அடிப்படையில் ரூ2500- தொகுப்பு ஊதியத்தில் கணினி விபரப்பதிவாளராக கன்னியாகுமரி மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிமர்த்தப்பட்டு அரசாணை எண் 4னு 52 உள்(காவல்-15) துறை, நாள் 22.06.2007 மற்றும் தலைமை அலுவலக மேல்வரைவு எண்.சி.எ.1-8639-2009,நாள்.26.09.2007ன்படி 01.05.2007 முதல் 3050-75-3960-80-4590 என்ற அடிப்படை காலமுறை ஊதியம் பெற்று வந்தார். பணி அரசாணை எண் 220உள்(காவல்-15) துறை நாள்18.02.2016 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.130052-2(2)2016நாள்.26.09.2017ன்படி கன்னியாகுமரி மாவட்ட காவல் அலுவலகத்தில் தற்காலிக கணினிவிபர பதிவாளராக பணிபுரிந்து வந்த திருமதி.பி.ரேகா என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவருடைய கணினி விபர பதிவாளர்பணியில் 01.05.2007 முற்பகல் முதல் பணியினை வரன்முறை செய்து கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் ஆணை ந.க.எண் அ4-11407-2016 ஆணை எண் 373-2016 நாள்.28.04.2016ன்படி ஆணையிடப்பட்டது.

3) கணினி விபரப்பதிவாளராக பணியாற்றி வந்த திருமதி.பி.ரேகா என்பவர் தலைமை அலுவலக ஆணை ந.க.எண் 179367-என்.ஜி.பி.2(2)-2019 நாள்.13.09.2019ன்படி திருநெல்வேலி மாநகர காவல் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 23.09.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்ய தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/C.A.R.1/2016, நாள் 21.12.2017ல் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்க கீழ்கண்ட விபரங்களை சரிபார்க்கப்பட்டது.

அ) அரசாணை (நிலை) எண் 560 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்03.08.1997ல் உள்ள நிபந்தனைகளை புர்த்தி செய்கிறார்.

ஆ) அரசாணை (நிலை)எண் 202 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்08.10.2007ன்படி மறைந்த அரசு ஊழியரின் மனைவி தன் மகனுக்கு கருணை அடிப்படை பணி நியமனம் வேண்டி மூன்று வருடத்திற்குள் மனு அளித்துள்ளார்.

இ) அரசாணை எண்220உள்(கா.15) துறை நாள்.18.02.2016ன்படி 29.09.2005ல் தற்காலிக கணினி விபர பதிவாளராக பணியமர்த்தப்பட்ட இவரது பதவி 01.05.2007 முதல் வரன்முறைபடுத்தப்பட்டது.

ஈ) கருணை அடிப்படை பணிநியமனம் தொடர்பான அனைத்து சான்றிதழ்களும் சரிபார்க்கப்பட்டன.

எனவே காவல்துறையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் திருமதி.பி.ரேகா என்பவரின் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குபட்டு 23.09.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/- தீபக் எம்.டமோர் ,
காவல்துறை தலைவர்
காவல் ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகரம்.

பெறுநர்
திருமதி.பி.ரேகா,
இளநிலை உதவியாளர்
மாநகர காவல் அலுவலகம், திருநெல்வேலி

நகல்- காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை
நகல்- அ5 பிரிவு மற்றும் பி2 பிரிவு
நகல் – ஆணை புத்தகம்.

/உ.ந.உ.ப.அ/

முதுநிலை நிர்வாக அலுவலர்.
6/11/2020

06/11/2020